**செ. கு. எண்**: 398 **நாள்**: 06.11.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 6.11.2012

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், சின்னநெற்குணம் கிராமத்தில், தேசிய நெடுஞ்சாலையில் 4.11.2012 அன்று நாகர்கோவிலிலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து தன்னுடைய கட்டுப்பாட்டை இழந்து இடது புறம் சென்று கொண்டிருந்த லாரியின் மீது மோதியதில் பேருந்தின் நடத்துனர் திரு. வேணுகோபால் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், வர்த்தகரெட்டிபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பரமசிவன் என்பவர் 4.11.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் பேரூரணி கிராமம், பேரூரணி – செக்காரக்குடி சாலை சந்திப்பு அருகே சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த பேருந்து நடத்துனர் திரு. வேணுகோபால் மற்றும் திரு. பரமசிவன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், சின்னநெற்குணம் கிராமத்தில், ஏற்பட்ட சாலை விபத்தில் பேருந்தில் பயணம் செய்த கன்னியாகுமரி மாவட்டம், ஆலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மார்ட்டின் பாலாஜி என்பவர் பலத்த காயமடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திரு. வேணுகோபால் மற்றும் திரு. பரமசிவன் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. மார்ட்டின் பாலாஜிக்கு 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**